# புழங்கு பொருட்களின் எதிர்கால நிலை

முனைவர் வா. சித்ரா
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி
சூலூர் கோவை 641 402
9894606369
chitra.v@rvsgroup.com

## ஆய்வுச்சுருக்கம்

மனித இனம் ஏதோ ஒரு சூழலில் தத்தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் புழங்கு பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர். புழங்கு பொருட்களோடு உற வாடாத நேரமே இல்லை என கூறுமளவிற்கு, மக்களின் வாழ்க்கையும் புழங்கு பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும் பொழுது கூட, ஆடை அணிகலன்கள் என அன்றாட பொருட்களை பயன்படுத்திவரும் நிலையினை பரவலாக காணமுடிகிறது. மனிதனது வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் நிகழும் அனைத்து இன்ப துன்ப நிகழ்வுகளிலும் புழங்குங்கு பொருட்கள் படுத்தப்பட்டு வருகின்றது. இறந்த பிறகும் கூட, இறந்தவரின் நினைவாக அவர்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்களை பாதுகாத்து சில நேரங்களில் பயன்படுத்தி வருகின்ற நிலையினையும் பரவலாக காணமுடிகின்றது. இப்படியாக மக்களது வாழ்வோடும் வளர்ச்சியோடு பின்னிப்பிணைந்து காணப்பட்ட மரபுசார்ந்த புழங்கு பொருட்கள் நாகரீக மாற்றத்தால் நசுக்கப்பட்ட நலிவுற்று காணப்படும் நிலையினை எங்கும் காண முடிகின்றது. புழங்கு பொருட்களின் எதிர்கால நிலையே கேள்விக்குறியாக இருக்கும் இந்நிலையில் புழங்கு பொருட்களை மீட்டுருவாக்கம் செய்வது ஒவ்வொருவரின் கடமையாக இருப்பதோடு முன்னோர்களுக்கு நாம் செலுத்தும் நன்றி கலந்த காணிக்கையும் ஆகும். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்கால நிலைகளில் புழங்கு பொருட்களின் பயன்பாட்டு பண்பாட்டு நிலைகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

Keywords: நாகரிக வளர்ச்சியில் புழங்குபொருட்களின் நிலைமாற்றம், அறிவியல் வளர்ச்சியில் புழங்கு பொருட்களின் நிலைமாற்றம், அறிவியலால் உருவான புழங்குபொருட்களின் வளர்ச்சிக்குக் காரணம், அழிந்துபோன புழங்கு பொருட்கள் மண்ணாலானவை, மண்பானைகள்

## முன்னுரை

ஒரு பொருளானது உருவாவதற்குப் பல தலைமுறைகளின் உழைப்புத் தேவைப்படுகிறது. உதாரணமாக நாம் இன்று வாய்க்குச் சுவையான உணவினை உண்ணுகிறோம் என்றால் நமக்கு முன்னுள்ள தலைமுறையினர் பல உணவினை செய்து பார்த்து தயாரித்து தந்த கொடையேயாகும். அதுபோலத்தான் புழங்குப் பொருட்களும் முதலில் கல்லை எடுத்து கருவியைத்

தயாரிக்க ஆரம்பித்த மனிதன் அதில் பழகிப் பழகி கலையை உருவாக்கினான். புழங்கு பொருட்களின் வளர்ச்சியும் அத்தகையதே. காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மாறி மாறி நாகரிகம் கற்ற மனிதன், அறிவுபெற்று அறிவியலை ஆராய்ந்து கண்டறிந்தான். அதனால் நமக்குக் கிடைத்த தீமைகள் சில என்றாலும் நன்மைகள் ஆயிரம் ஆயிரம். அந்நன்மைகளின் மொத்த ரூபமே நவீனத்துவம் என்கிறோம். அந்நவீனத்துவத்தினால் புழங்குபொருட்களில் ஏற்பட்ட மாற்றம், நன்மை, தீமை போன்றவற்றைப் பின்வருமாறு காணலாம்.

## நாகரிக வளர்ச்சியில் புழங்குபொருட்களின் நிலைமாற்றம்

உலகிலே தோன்றிய மனித இனங்கள் ஆரம்ப காலங்களில் கல், மண், மரம், இரும்பு என இயற்கைச் சார்ந்த பொருட்களினால் செய்யப்பட்ட புழங்குப் பொருட்களைப் பயன்படுத்தி வாழ்ந்தனர். அத்தகைய பொருட்கள் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் ஒன்றுபட்டிருந்தபோதும், நாட்டுக்கு நாடும், மாநிலத்துக்கு மாநிலமும், மாவட்டத்திற்கு மாவட்டமும் அமைப்பு முறையிலும், அழகியல் நிலையிலும் வேறுபட்டே காணப்பட்டன. நாகரிகம் வளர்ச்சி அடைய அவற்றின் தாக்கம் மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் மாற்றமுறச் செய்து பேரிழப்பை ஏற்படுத்தலாயின. நடை, உடை, பாவனைகள், உணவு என அனைத்து நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பினும், அவைகளினால் அவற்றின் பயன்பாடு முழுமையாக மாறியிருப்பதாகத் தெரியவில்லை. வேட்டி, சேலை, தாவணி போன்ற ஆடைகளின் பயன்பாடும், சோறு, கஞ்சி, குழம்பு போன்ற உணவின் பயன்பாடும் கிராமப்புறங்களில் இன்றைய நிலையிலும் பழமை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இருப்பினும் புழங்குபொருட்களின் நிலை அவற்றிற்கு எதிர்மறையாக சிற்சில இல்லங்களைத் தவிர்த்து முற்றிலும் மாறுபட்டதாகவே காணமுடிகின்றது.

இயற்கைப் பொருட்களினால் மனிதனுக்குக் கிடைக்கும் ஆற்றலை முழுமையாக உணர்ந்திருந்தபொழுதும் அவற்றின் பயன்பாடு முன்னிலைப் பெறாமல் ஓரங்கட்டி ஒதுக்கி வைக்கப்பட்ட அவல நிலையினைப் பரவலாகக் காணமுடிகின்றது. நாகரிக வளர்ச்சியில் நசுக்கப்பட்ட பொருட்களுள் முதன்மையானதாகப் புழங்கு பொருட்களைச் சுட்டலாம். மனித வாழ்வின் அகநிலையை விளக்குவது பண்பாடாகும். அகத்திற்கு புறமான உணவு, உடை, உறையுள் போன்றவற்றின் புறநிலையை விளக்குவது நாகரிகமாகும். மேலைநாடுகளில் வளர்ச்சிபெறற நாகரிகம், படிப்படியாக இந்திய நாட்டிற்குள் நுழைந்து, ஏழை, பணக்காரன் என்ற அனைத்து மக்களின் வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தலாயின. முதலில் நகரங்களை ஆட்டிவைத்த நாகரிகம் கிராமங்களின் மூலைமுடுக்குகளெங்கும் நிலை பெறத் தொடங்கின. அதன் விளைவு உணவு, உடை, உறையுள் போன்றவற்றில் மிகுதியான மாற்றங்கள் ஏற்படலாயிற்று.

காலையில் எழுந்து நீராகாரம் குடித்தவர்கள் இன்று காபியும், காலை உணவாக பழையச்சோற்றை உண்டவர்கள் இன்று இட்லி, தோசையும் வேட்டி சேலைக்கு மாறாக பேன்ட், சுடிதார், நைட்டி என அவர்களின் அன்றாட

பகல்பொழுது தொடங்கி இரவு நேரம் வரையிலும் உட்கொள்ளும் உணவிலும், உடுத்தும் உடையிலும் உறங்கும் உறைவிடங்களிலும் நாகரிகம் நடமாடத் தொடங்கிற்று. நாகரிக மாற்றத்தை முதியவர்கள் விரும்பாமல் எதிர்த்த பொழுதும், இளைய தலைமுறையினர் அம்மாற்றங்களைப் பெரிதும் விரும்புகின்றனர். உணவு, உடை, உறையுள் போன்றவற்றால் நாகரிகம் அடைந்ததாக சமுதாயத்தில் தன்னை நிறுத்திக் கொள்ளும் மனநிலையை மக்கள் அனைவரும் விரும்புவதாகவே காணப்படுகின்றது. உண்ணும் உணவில் நாகரிகம் அடைந்த மக்கள், அவ்வுணவுகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட புழங்குபொருட்களையும் நாகரிக வளர்ச்சிக்கு இட்டுச் சென்றனர். இதன் விளைவு பழமை சார்ந்த இயற்கைப் பொருட்கள் வீழ்ச்சிப்பெறத் தொடங்கி செயற்கைப் பொருட்கள் மக்கள் வாழ்க்கையில் நிலைபெறத் தொடங்கிற்று. சோறு வடிக்கப் பயன்படுத்தப்பட்ட மட்பானைகளெல்லாம் மறைந்து அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்களாயின். தென்னை ஓலை, வைக்கோலால் உருவாக்கப்பட்ட வீடுகள், சிமென்ட் பூசப்பெற்ற வீடுகளாக மாறின. அதுபோலவே எஞ்சிய பழமைச் சார்ந்த பொருட்களும் தன்னிலையை இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

நாகரிக மாற்றத்தால் கூட்டுக்குடும்பங்கள் அழிந்து தனிக் குடித்தனங்கள் நிறைய தோன்றின. மனித வாழ்வில் மாற்றம் தேவைதான். இருப்பினும் அம்மாற்றத்தால் பழமைச் சார்ந்த முன்னோர்களின் எண்ணங்களில் உருவான, பண்பாட்டைப் பறைசாற்றும் பொருட்களின் அழிவினைச் சிறிதும் உற்று நோக்காமல் அடையும் மாற்றங்கள் தேவைதானா என்பதனை எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. காலையில் இட்லி, தோசை சாப்பிட்டேன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படும் மக்கள் சோறு சாப்பிட்டதைச் சொல்வதற்குத் தயங்குகிறார்கள். நாகரிக வளர்ச்சி மனிதனின் அன்றாட உணவு, உடை, உறையுள் போன்றவற்றில் ஏற்படுத்திய மாற்றம் நகரம் மட்டுமன்றி கிராமங்களிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டுப்புறப் புழங்குபொருட்களை நலிவுறச் செய்து தமிழர் பண்பாட்டைத் தடுக்கும் தடைக்கற்களாக தற்போது விளங்குவதைப் பரவலாகக் காணமுடிகின்றது.

## அறிவியல் வளர்ச்சியில் புழங்கு பொருட்களின் நிலைமாற்றம்

ஏட்டறிவும் எழுத்தறிவும் இல்லாத மக்களுக்குள்ளே வாய்மொழி வழியாக வழிந்தோடிய சிந்தனைகளின் வெளிப்பாடான நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் இன்ப துன்ப நுகர்வுகளைத் தெள;ளத் தெளிவாய் படம்பிடித்துக் காட்டுகின்றன. பாடலாய், பழமொழியாய், விடுகதையாய், கதைகளாய், புழங்குபொருட்களாய் பாகுபடுத்தி பயன்படுத்தியபொழுதும் அவை யாவும் மனித வாழ்க்கைக்குத் தேவையான நன்னெறிகளையும், தேவையில்லாத தீய நெறிகளையும் விளக்கிப் பண்பாட்டுப் பொருண்மையைப் பறைசாற்றும் பொக்கிஷமாகத் திகழ்கின்றன.

காலத்தின் தொடக்கத்தில் காட்டுமிராண்டியாய், ஓரிடத்தில் நில்லாது உணவுக்காகவும் உடமைக்காகவும் ஒவ்வொரு இடமாய் அலைந்து திரிந்த

மனிதன் இயற்கையின் அச்சுறுத்தலையும், விங்குகளின் தாக்குதலையும் கண்டு மிகவும் அச்சம் கொண்டு அதனை எதிர்க்க குழுக்களாக வாழ முற்பட்டதின் விளைவே சமூகம் தோற்றம் பெற்றதென வரலாற்று அறிஞர்களும், சமூக அறிஞர்களும் குறிப்பிடுவர். இவ்வாறு குழுக்களாக வாழத் தொடங்கிய மனிதனின் வாழ்வில் தமது தேவைக்காகவும் பயன்பாட்டிற்காகவும் தமது நுண்ணறிவினைக் கொண்டு பல்வேறு பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்தினர். அவ்வாறு அவர்கள் பயன்படுத்திய பொருட்களே மரபு வழியாகத் தொடர்ந்து சிற்சிலப் பொருட்களைத் தவிர்த்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் நுண்ணிய ஆராய்ச்சிக் கொண்டு கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், அவர்கள் வாழ்ந்த காலத்தையும் சமூகத்தையும் நோக்குமிடத்து, மிகுந்த வியப்பினை உண்டாக்குகின்றது. நாட்டுப்புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலும், உணவு செய்து உபயோகப்படுத்துதலுக்கும் தொழில் செய்வதற்கும், விவசாயம் மேற்கொள்வதற்கும், மருத்துவத் தேவைக்கும், வாழ்க்கை வட்டச் சடங்குகளுக்கும் திருவிழாவிற்கும் தேவையான பல்வேறு பொருட்களை உருவாக்கிப் பண்பாட்டைக் காக்கும் வாழ்க்கையினை மேற்கொண்டுள்ளனர்.

> "பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்வதற்குத்
>
> தரவுகள் அவசியம். இவற்றை அளிப்பவை
>
> நாட்டுப்புற வழக்காறுகள் என்பர். நமது
>
> முன்னோர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துகிற
>
> விழாக்கள், ஒழுகலாறுகள், உணவு முறைகள்,
>
> விளையாட்டுக்கள், நாட்டுப்புற மருந்து வகைகள்,
>
> நாட்டுப்புறப் பொருட்கள் முதலியன சேகரிக்கப்பட்டு
>
> பதிவு செய்யப்பட்டு ஆழமாக ஆய்வு செய்யப்படவேண்டும்"[1]

எனக் குறிப்பிடுகின்றார். புழங்குபொருட்கள் அமைப்பாலும், பயன்படுத்தும் விதத்தாலும் இனத்திற்கு இனமும் மதத்திற்கு மதமும் வேறுபட்டு இருந்த போதிலும் பண்பாடு எனும் மையப்பொருளைக் குறிப்பதாக அமைந்து காணப்படுகின்றன. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களான நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் அறிவியல் வளர்ச்சியால் பேரிழப்பை அடைந்துள்ளன. நகர்ப்புறம் மட்டுமின்றி நாட்டுப்புறத்திலும் பழமைச்சார்ந்த பொருட்கள் அழிந்தும் சிதைந்தும் பயன்படுத்தப்படாமல் ஓரங்கட்டி ஓதுக்கி வைக்கப்பட்டு அவை இருந்த இடங்களையும் தாண்டி அறிவியல் வளர்ச்சியால் உண்டாக்கப்பட்ட மின்சாரப் புழங்குபொருட்கள் பயன்படுத்தப்பட்டு வரும் அவல நிலையினைப் பரவலாகக் காணமுடிகிறது.

ஏறத்தாழ நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் அமைத்திற்கும் ஒப்பாக நவீனப் புழங்கு பொருட்கள் மின்சார உதவியுடனோ அல்லது மின்சார உதவியின்றியே புழங்கப்பட்டு வருவதனை நிரம்பக் காணமுடிகின்றது

வீட்டின் திண்ணையிலும் கொல்லைப்புறத்திலும் தஞ்சமடைந்து கேட்பாரற்றுக் கிடக்கும் நாட்டுப்புறப் புழங்குபொருட்கள் பண்பாட்டுச் சூழலில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையினையும் காணமுடிகின்றது பன்னெடுங்காலமாய் மக்கள் வாழ்வோடும் வளர்ச்சியோடும் இணைந்திருந்த இப்புழங்கு பொருட்கள் அறிவியல் வளர்ச்சியினால் அழிவுற்று காணப்படுகின்றது.

**அறிவியலால் உருவான புழங்குபொருட்களின் வளர்ச்சிக்குக் காரணம்**

நாட்டுப்புறப் புழங்கு பொருட்களின் வீழ்ச்சிக்கும், நவீனப் புழங்கு பொருட்களின் வளர்ச்சிக்கும் மக்களிடையே காணப்படும் போட்டி மனப்பான்மையும் போலச்செய்தல் போன்ற எண்ணங்களும் முதன்மையான காரணங்களாகத் திகழ்கின்றன. ஒருவர் பயன்படுத்தவேண்டும் என்ற போலச் செய்தல் எண்ணமும், மற்றவர்கள் வாங்கிப் பயன்படுத்தும் பொருட்களைப் பார்த்துப் பொறாமைக் கொண்டு, அதைப்போலவே சிரமப்பட்டாவது அந்தப் பொருட்களைப் பார்த்துப் பொறாமைக் கொண்டு அதைப்போலவே சிரமப்பட்டாவது அந்தப்பொருளை வாங்கியோ அல்லது திருடியோ பயன்படுத்த வேண்டும் என்ற போட்டி மனப்பான்மைக் கொண்ட எண்ணங்களும், நகரம், கிராமம் என வேறுபாடின்றி அனைத்து மக்களிடமும் காணப்படுகின்றன.

ஒருவரது வீட்டில் ஆட்டுக்கல்லிற்குப் பதிலாக கிரைண்டரோ, அம்மிக் கல்லிற்குப் பதிலாக மிக்சியோ பயன்படுத்தினால் மற்றவர்களும் அதைப் போலவே கிரைண்டரும் மிக்சியும் பயன்படுத்த வேண்டும் என்ற போலச் செய்தல் உத்தியால் அதனை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதனால் காலந்தோறும் பயன்படுத்தப்பட்டு வந்த பழமைச் சார்ந்த நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் பயன்படுத்தப்படாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. மேலும் நவீனப் பொருட்களினால் மற்றவர்கள் மத்தியில் கிடைக்கின்ற நன்மதிப்பும், வேலைப்பளு இல்லாமல் கிடைக்கின்ற சுகத்தையும், நாட்டுப்புறப் புழங்கு பொருட்களினால் உண்டாகும் சிரமங்களும் வேலைப்பளுவையும் ஒப்பிட்டுப் பார்த்து, நவீனப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

‘எதிர்த்த வீட்டுக்காரி ஆம்புளப் புள்ள பெத்ததைப் பார்த்த நேர் வீட்டுக்காரி கொழவிக் கல்லை எடுத்து அடி வயித்துல மங்கு மங்குன்னு குத்திக்கிட்டாளாம்’ எனற பழமொழிக்கேற்ப மற்றவர்களின் வீட்டில் ஏதாவது ஒரு நவீனப்பொருள் பயன்படுத்துவதைப் பார்த்தால் பொறாமைக் கொண்டு தாமும் அந்தப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். அதற்காக தலையை அடமானம் வைத்தாவது அந்தமாதிரிப் பொருளை வாங்கிவரச் சொல்லும் பெண்களைக் கிராமப்புறத்தில் நிரம்பக் காணமுடிகின்றது. இத்தகைய எண்ணத்தினால் நன்றாகப் பயன்படுத்தப்பட்டு வந்த நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள், பயன்படுத்தப்படாமல் ஓரங்கட்டி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அவல நிலையினைப் பரவலாகக் காணமுடிகின்றது.

போலச்செய்தாலும் போட்டி மனப்பான்மையாலும் காலந்தோறும் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் இருந்தும், மக்களிடையே உண்டாகின்ற

எண்ணங்களின் விளைவுகளும், செயல்களின் தன்மையும் புழங்கு பொருட்களை அடியோடு வேரறுத்து அழிவை உண்டாக்குகின்றன. நவீனப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்துவதினால் சமுதாயத்தில் நன்மதிப்பு கிடைக்கும் என்ற மனநிலையை மாற்றிக்கொண்டு போலச்செய்தலையும், போட்டி மனப்பான்மையும் அழித்து பழமைப்பொருட்களின் உன்னதத் தன்மையினை மக்கள் அறிந்து அதனை மீண்டும் பயன்படுத்த முன்வரும் நிலை வராதவரை நாட்டுப்புறப் புழங்கு பொருட்களின் வளர்ச்சி கேள்விக் குறியாகவே அமையும்.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
>
> வழுவல கால வகையினானே"[2]

என்னும் நூற்பாவின் படியே உலகச் செயல்கள் அனைத்தும் இயற்கையாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதாவது கலை வளர்ச்சிக்குப் பழயவைகள் அனைத்தும் மறைந்து, புதியவை உருவாகிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு மாறுவது குற்றமல்ல என்றும் இலக்கணம் வகுத்து வைத்துள்ளனர். அதன்படியே புழங்கு பொருட்களும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப பழைய பொருட்களெல்லாம் அழிந்து புதிய அறிவியல் கருவிகள் தோன்றியுள்ளது. அவற்றைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

## அழிந்துபோன புழங்கு பொருட்கள் மண்ணாலானவை

அறிவியல் வளர்ச்சியினால் மண்சார்ந்த புழங்கு பொருட்களின் பயன்பாடு முற்றிலும் அழிந்துவிட்டதாகவே காணமுடிகின்றது. மண்பானையில் சோறாக்குதல், மண் சட்டியில் குழம்பு வைத்தல் போன்றன இக்காலக்கட்டத்தில் நாகரிக இழுக்காகவே கருதப்படுகிறது. மண் சார்ந்த புழங்கு பொருட்களை நீக்கி, மண் சாராத நவீனப் பொருட்களாகிய அலுமினியக் குண்டான், எவர்சில்வர் பாத்திரம் போன்றவற்றிலோ அல்லது குக்கரிலோ சோறாக்குவதையே பெருமையாகக் கருதுகின்றனர். வீட்டிற்கு வருகைதரும் உறவினர்களுக்கோ விருந்தாளிகளுக்கோ தங்கள் வீட்டில் இதுமாதிரியான நவீனப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம் அல்லது வைத்திருக்கிறோம் எனக் காட்டிக் கொள்வதைப் பெருமையாகக் கருதுகின்றனர். மக்களின் இத்தகைய மனநிலையால் பழமைச்சார்ந்த நாட்டுப்புறப் புழங்குபொருட்களான மண்சார்ந்த பொருட்கள் முழுவதும் அழிந்துவிட்டதாகவே காணமுடிகின்றது.

மண்ணாலான பொருட்களைப் பயன்பாட்டிலிருந்து ஒதுக்குவதற்கான காரணத்தை தகவலாளி அகிலா என்பாரிடம் கேட்டபோது,

> "மண்பானைகள் அல்லது சட்டிகளைப் பயன்படுத்துவது
>
> சிரமமாக உள்ளது. கண்ணாடிப் பொருட்களைப் போன்று
>
> கவனமாக ஏற்றி இறக்கி வைத்துப் பயன்படுத்தினால் தான்
>
> உடையாமல் பத்திரமாக இருக்கும். கைத்தவறி கீழே விழுந்து
>
> விட்டால் அப்பொருள் திரும்பப் பயன்பாட்டுக்கு உதவாமல்

போய்விடும். மேலும் மண்பானைகளில் சோறு குழம்பு
ஆக்குவதால் உடம்புக்கு நல்லது எனவும் சுவையாக
இருக்குமென்றும் சொல்வார்கள். ஆனால்
மண் பானைகளில் சோறு, குழம்பு ஆக்குவதை
மற்றவர்கள் இழிவாகப் பார்ப்பதாலும், கீழ்
நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையை
உணர்வதாலும் மண்பானைகள், சட்டிகளைப்
பயன்படுத்தாமல் அலுமினியம், எவர்சில்வர்
பாத்திரங்களைப் பயன்படுத்துகிறோம்"[3]

எனக் குறிப்பிட்டார்.

மண்ணால் ஆனப் பொருட்களின் நன்மைகளைத் தெரிந்திருக்கும் அவற்றை நாகரிகக் குறைவாகவும், இழிவாகவும் கருதுவதால் அவற்றைப் பெரும்பான்மையான மக்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருகின்றனர். மேலும் நவீனப் பொருட்கள் நீண்டகாலப் பயன்பாட்டிற்கு உதவுவதால் அவற்றைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

மண்ணால் ஆனப் பொருட்களின் பயன்பாடு மக்களின் அன்றாட வாழ்விலிருந்து சிறுகச்சிறுக குறைந்துகொண்டே வருவதனைக் கிராமப் புறங்களில் நிரம்பக் காணமுடிகின்றது. இயற்கை வழங்கிய அருங்கொடைகளுள் ஒன்றான மண், அவற்றினால் அழிந்து வரும் நிலையினை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பகுதிகளில் மிகுதியாகக் காண முடிகின்றுத. சிற்சில பொருட்கள் முற்றிலும் அழிந்தும், சிற்சிலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. பயன்படுத்தப்பட்டு வரும் பொருட்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே நினைக்கத் தோன்றுகிறது.

## மண்பானைகள்

சோறு வடிப்பதற்காகப் பழங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மண்பானைகள் தற்பொழுது முற்றிலும் அழிந்துவிட்ட நிலையிலே காணப்படுகின்றுத. சோறு வடிக்கும் பானைகளைக் கடவுளுக்கு நிகராக வணங்கிய மக்கள், தற்பொழுது அதனை ஒருபோதும் பயன்படுத்தாமலும் அப்பானைகளை விரும்பி வாங்காமலும் ஒதுக்கிவிட்ட நிலையினைப் பரவலாகக் காணமுடிகின்றது. 'பானையிலே வடிச்ச சோறு பசியைப் போக்கும்'. முந்தைய காலக்கட்டங்களில் முழுக்க முழுக்க உடலுழைப்பை நமபியே வயலிலும் கொல்லையிலும் கொட்டும் மழையையும், கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது உழைக்கும் மக்களுக்கு ஏற்படும் பசியை பானையில் ஆக்கிய சோறு போக்கும். தற்பொழுது மக்கள் கடினமாக உழைக்க விரும்பவில்லை. அதனால் அவர்களுக்கு மிகுந்து பசியில்லை.

"பசிக்காக சாப்பிட்ட காலம் மாறி ருசிக்காக

சாப்பிடும் இக்காலத்தில் பானையை

யாரப்பா பயன்படுத்துவார்கள்”[4]

எனத் தகவலாளர் ரெ.பழனிச்சாமி குறிப்பிட்டார். இப்படியாக மண்பானைகளில் சோறாக்குவதையும் குழம்பு வைப்பதையும் மறந்த மக்கள் அத்தகைய தொழிலுக்குத் தேவையான பொருட்களையும் மறைச் செய்துள்ளனர்.

இவைபோலவே தண்ணீர் பிடித்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட பானைகளும், தோண்டிகளும் முற்றிலுமாக அழிந்து போயுள்ளன. இருப்பினும் வெயில் காலங்களில் மட்டும் புதிதாகப் பானை வாங்கி தண்ணீர் நிரப்பி வைத்துக் குடிக்கம் நிலையினைக் காணமுடிகின்றது. மண்ணாலான இட்டிப்பானை, மண்ணாலான தோசைக்கல், பணியாரச் சட்டி. ஆப்பச்சட்டி, கூழ்ப்பானை மண்கலயம், மண்தட்டு போன்ற எண்ணற்ற மண்ணாலான பொருட்கள் மக்களின் அன்றாடப் பயன்பாட்டிலிருந்து முழுவதும் அழிந்து போயுள்ளன.

மேற்கண்ட பொருட்களுக்கு ஏதுவாக நவீனப் புழங்குப் பொருட்களின் பயன்பாடு முற்றிலும் அழிந்துபோயுள்ள நிலையினை நிரம்பக் காணமுடிகின்றது.

“காயமே இது பொய்யடா வெறும்

காற்றடைத்த பையடா மாயவனார் செய்த

மண்ணுப் பாண்ட ஓடடடா”[5]

எனச் சித்தர்கள் உடலையே மண்பாண்டமாக நினைத்துப் போற்றினர். மனிதனது பிறப்பு முதல் பிணத்தைச் சுற்றி மூன்று துளையிட்டு உடைக்கும் பிறப்பு நிகழ்ச்சி வரை மண்பாண்டங்கள் மக்களோடும் பண்பாட்டோடும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது.

மேற்கண்ட பொருட்களேயன்றி மண்ணாலான பழமைசார்ந்த பொருட்கள் நிரம்ப அழிந்துபோயுள்ளன. அவற்றின் பயன்பாட்டினை மீள்நிலைக்குக் கொண்டு வருவது இளைய தலைமுறையின் கைகளிலும் அப்பொருட்களின் பயன்பாட்டை இழிநிலையாகக் கருதாத நல்ல மனங்களிலும் உள்ளது.

## முடிவுரை

நாட்டுப்புறப் புழங்கு பொருட்களினால் கிடைக்கக்கூடிய நன்மையினை உணர்ந்திருந்த பொழுதும், காலமின்மையாலும், நாகரீகப் பெருமையாலும் நவீனப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையை மக்களின் மனதிலிருந்து முழுமையாக மாற்றி ஓய்வு நேரங்களிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ நாட்டுப்புறப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்தினால், பழமையின் சிறப்பு அழியாமல் இருப்பதோடு பண்பாட்டு சிறப்பும் வளர்ச்சி அடையும்.

நாகரீகம் என்பது இன்று உலகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் விஷயமாகிவிட்டது. இன்று ஒரு போக்கில் போகும் உலகம் நாளை வேறு தி;யில் பயணிக்க ஆரம்பிக்கிறது. கேட்டால் நவீனத்துவம் என்கிறது. கல்வி, உணவு, உடை, இருப்பிடம், பழக்கவழக்கம், பேச்சு என்று மனிதனுடைய எல்லா செயல்களிலும் நவீனத்துவம் வெளிப்படுகிறது. புதியவற்றைப் பார்த்து மதிமயங்குவது மனித இயல்பு என்பதனால் புழங்குபொருள்களிலும் மனிதன் எளிமையாக நவீனத்துவத்தையே விரும்புகிறான். இதில் பெரிதாக தவறொன்றும் இல்லையென்றாலும் பழைய பொருள்களில் உள்ள நன்மைகளையும், புதிய பொருள்களில் உள்ள நன்மை தீமைகளையும் எடையிட்டு ஆராய்ந்து, புதியவைகளை ஏற்றுக் கொண்டாலும், புழங்கு பொருட்களை இழக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## அடிக்குறிப்புகள்

1. அரு.மருததுரை நாட்டுப்புறப் பண்பாட்டுக்கூறுகள், ப.67.
2. நன்னூல் எழுத்திகாரம் ப. 69
3. அகிலா வயது 63 மேட்டுப்பாளையம் (தகவலாளர்)
4. ரெ. புழனிச்சாமி வயது 70 பச்சபாளையம் (தகவலாளர்)
5. சித்தர்பாடல்கள் (திருமூலர்)

துணைநின்ற நூல்கள்


1. அரு.மருததுரை - நாட்டுப்புற பண்பாட்டுக் கூறுகள்
அருணா வெளியீடு
திருச்சி – 2003.

2. இ.சாமுவேல் பிள்ளை - நன்னூல் எழுத்ததிகாரம
சுடர் பதிப்பகம்
சென்னை - 1

3. சரவணமுத்துப்பிள்ளை, - பதினெண் சித்தர்கள்
1961 ஞானக் கோவை,
இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,
சென்னை - 1.